இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 340 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 04 – சனிக்கிழமை 20 ஜூலை 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 340 : Thiruvalluvar Year - 2055 - Aadi 04 - Saturday 20 July 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


### பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘வாழ்விலோர் திருநாள்’ என அறிவித்த

# ஜூலை 18 - “தமிழ்நாடு நாள்” உணர்ச்சிமிகு விழா கொண்டாட்டம்!

## கழக அரசு சார்பில் எழுச்சிமிகு நிகழ்ச்சி ! ‘தமிழ்நாடு வாழ்க !’ என முதல்வர் மும்முறை முழக்கம் !

**சென்னை, ஜூலை 20-**

**சென்னை மாகாணமாக இருந்த தாய்த் தமிழ்நாட்டிற்கு, “தமிழ்நாடு” எனப் பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளான நேற்று முன்தினம், ‘தமிழ்நாடு திருநாளாக’ வாழ்விலோர் திருநாளாக உணர்ச்சி மிகு விழாவாகக் கொண்டாடப்பட்டது.**

**தமிழ்நாடு திருநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்து தமது சமூக வலைதளப் பக்கத்தில் காணொலி ஒன்றை வெளியிட்டார்.**

**அதில் ‘தமிழ்நாடு வாழ்க!’ என மூன்று முறை உணர்ச்சி முழக்கமிட்டுள்ளார், முதல்வர் அவர்கள்!**

அதன் விபரம் வருமாறு:-

இந்தியாவில் எந்த மாநிலத்திற்கும் இல்லாத பெருமை தமிழ்நாட்டின் பெயருக்கு உண்டு... எந்த மாநிலத்திற்கும் நாடு என்ற பெயர் இருக்காது. அத்தகைய பெருமைக்குரிய பெயர் சூட்டப்பட்ட நாள் தான் ஜூலை 18.



தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 18.07.1967 அன்று சென்னை மாகாணம் என்றிருந்ததை தமிழ்நாடு என பெயர் மாற்றி வரலாற்றுச் சிறப்புமிகு தீர்மானத்தை நிறைவேற்றினார்.

தமிழ்நாடு என்ற பெயர் சூட்டிய சாதனையானது, சாதாரணமாக நடந்து விடவில்லை. பரந்துவிரிந்த தமிழ் நிலமும், இனமும் மிக நீண்ட வரலாறு கொண்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்திய பகுதி, மெட்ராஸ் ஸ்டேட், - அதாவது சென்னை மாகாணம் என்ற பெயரில் இருந்தது. அப்போது ஆந்திரா, கேரளா மாநிலங்களும் ஒன்றிணைந்து இருந்தன. இந்திய நாட்டின் விடுதலைக்குப் பிறகு 1950ஆம் ஆண்டு இந்தியா, குடியரசு நாடானது. அதையடுத்து 1956ல் மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டன.

அதன்படி கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. ஆனால் தமிழ் மொழி பேசும் மக்கள் இருந்த பகுதி சென்னை மாகாணமாகத் தொடர்ந்தது.

**பெரியாரின் முழக்கம்!**

சென்னை மாகாணத்தின் மேற்கு கடற்கரைப் பகுதிகள் கேரளாவுக்கும், கர்நாடகாவுக்கும் பிரிந்து சென்றன. சென்னை மாகாணத்தின் வட பகுதி ஆந்திர மாநிலத்திற்குச் சென்றது. எஞ்சிய நிலப்பகுதி சென்னை மாகாணம் அதாவது ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்றே அழைக்கப்பட்டது. “தமிழ்நாடு தமிழருக்கே” என்ற முழக்கத்தை 1938 ஆம் ஆண்டு முன்னெடுத்தார் தந்தை பெரியார் அவர்கள்! அப்போதுதான் ‘தமிழ்நாடு’ என்ற சொல் அரசியல் களத்தில் அரசியல் முழக்கமாக வெடித்தது. “மெட்ராஸ் மாநிலத்திற்கு ‘தமிழ்நாடு’ எனப் பெயர் சூட்ட வேண்டும்” என தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன.

**சட்டமன்றத்தில் கலைஞர் முழக்கம்!**

“உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னாலும், அதனைத் தரத் தயாராக இருக்கிறோம். ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம். தமிழ்நாடு



என்று இந்த நாட்டுக்கு பெயரிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்....” என்று 1960ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் முழங்கினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

**தியாகி சங்கரலிங்கனார்!**

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலத்துக்கு, ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டுவதற்கே நாம் பல பத்தாண்டுகளாகப் போராட வேண்டி வந்தது.

**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**

### இந்தியாவிலேயே நீடித்த -

# நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் தமிழ்நாடு முன்னணி!

## ஒன்றிய அரசின் புள்ளி விபரங்களைக் குறிப்பிட்டு - ‘தி இந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு!


**சென்னை, ஜூலை 20 -**

**மாநிலத்துக்கான நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் இருப்பதாக ஒன்றிய அரசின் புள்ளி விபரங்களைக் குறிப்பிட்டு ‘தி இந்து’ ஆங்கில நாளேடு பாராட்டு தெரிவித்துள்ளது.**

மக்களின் நிலையான வளர்ச்சி, அமைதி, நல்லுறவு ஆகிய 16 வகையான இலக்குகளை அடைய மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில் நிலையான வளர்ச்சி இலக்குகள் குறியீடு அறிக்கையை ஒன்றிய நிதி ஆயோக் அமைப்பு வெளிட்டு வருகிறது. அந்தவகையில், 2023-24 -ம் ஆண்டுக்கான நிலையான வளர்ச்சி இலக்குகள் குறியீட்டை நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ளது. இதில் 79 புள்ளிகளுடன் உத்தரகாண்ட் மாநிலம் முதலிடத்தையும், கேரள மாநிலம் 2வது இடத்தையும், 78 புள்ளிகளுடன் தமிழ்நாடு 3வது இடத்தையும் பிடித்துள்ளது. கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ளும் நடவடிக்கைகளில் 81 புள்ளிகளுடன் தமிழ்நாட்டிற்கு 2வது இடம் கிடைத்துள்ளது. தரமான கல்வி இலக்கில் 76 புள்ளிகளுடன் தமிழ்நாடு 4வது இடத்தில் உள்ளது.

**Status report**

Tamil Nadu's score in eleven sustainable development goals, according to a NITI Aayog report (2023-24), has been higher than the national average. For two of the goals, the State's indicators have been on a par with the national average



| Goal No. | Sustainable Development Goals | Tamil Nadu (out of 100) | National Average (out of 100) |
|---|---|---|---|
| 1 | No poverty | 92 | 72 |
| 2 | Zero hunger | 75 | 52 |
| 3 | Good health and well being | 77 | 77 |
| 4 | Quality education | 76 | 61 |
| 5 | Gender equality | 53 | 49 |
| 6 | Clean water and sanitation | 90 | 89 |
| 7 | Affordable and clean energy | 100 | 96 |
| 8 | Decent work and economic growth | 81 | 68 |
| 9 | Industry, Innovation and Infrastructure | 67 | 61 |
| 10 | Reduced Inequalities | 76 | 65 |
| 11 | Sustainable cities and communities | 81 | 83 |
| 12 | Responsible consumption and production | 78 | 78 |
| 13 | Climate action | 81 | 67 |
| 14 | Life below water | 61 | * |
| 15 | Life on land | 72 | 75 |
| 16 | Peace justice, and strong institutions | 78 | 74 |

Note: The Index does not measure indicators of SDG 17 - 'Partnership for the Goals' owing to unavailability of suitable data at the State/Union Territory level.

* Only coastal States are considered

**வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம் ‘நிதி ஆயோக்’ பாராட்டு!**

உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை, பள்ளிகளில் அடிப்படை வசதி மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகிய இலக்குகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. மொத்தம் உள்ள 16 இலக்குகளில் 15 இலக்குகளில் 65 புள்ளிகளுக்கு மேல் பெற்று Front Runner என்ற பிரிவில் தமிழ்நாடு இடம் பிடித்து அசத்தியுள்ளது.

வறுமை ஒழிப்பில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிப்பதாக ஒன்றிய அரசின் நிதி ஆயோக் பாராட்டு தெரிவித்துள்ளது. மாநிலத்துக்கான நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் இருப்பதற்கு ‘தி இந்து’ ஆங்கில நாளேடும் பாராட்டு தெரிவித்துள்ளது.

சமீபத்திய அறிக்கையில் 13 SDG களில் மாநிலம் முன்னணியில் உள்ளது. மலிவு மற்றும் தூய்மையான எரிசக்தி இலக்கை நிறைவேற்றுவதற்கான சாதனையாளர் பிரிவில் இது தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. பாலின சமத்துவம் மற்றும் தண்ணீருக்கு அடியில் வாழ்க்கை ஆகியவை மாநிலம் ‘செயல் திறன்’ பிரிவில் உள்ள இலக்குகளாகும்.

அந்த அறிக்கையின்படி, மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில், வறுமையை ஒழிக்கும் இலக்கில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

ஏறக்குறைய 92.8% குடும்பங்கள் குறைந்தபட்சம் ஒரு மொபைல் போன் வைத்திருக்கிறார்கள். ஆதார் அட்டையில் உள்ள மக்கள் தொகையின் சதவீதம் 97.94 என்று அறிக்கை குறிப்பிடுகிறது.

**திட்டமிடலில் சிறப்பாக செயல்படும் தமிழ்நாடு!**

சமூக மூலதனத்தில் மாநிலம் தொடர்ந்து முதலீடு செய்வதால், குறிப்பாக சமூகக் குறிகாட்டிகளைப் பொறுத்தமட்டில், எஸ்.டி.ஜி. களை அடைவதில் தமிழ்நாடு தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்கிறார், திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறையின் மூத்த எஸ்.டி.ஜி. ஆலோசகர் ஆர்.சுஜாதா.

“வேலையின்மை விகிதம் முந்தைய அறிக்கையுடன் ஒப்பிடுகையில், 7.2% இலிருந்து 4.8% ஆக குறைந்துள்ளது, மேலும் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் இரண்டு சதவீத புள்ளிகளால் அதிகரித்துள்ளது. இவை நல்ல அறிகுறிகள். பாலின சமத்துவத்தின் இலக்கைப் பொறுத்தவரை, பிறக்கும் போது பாலின விகிதம் தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 5 இலிருந்து எடுக்கப்பட்டது, இது மாதிரி கணக்கெடுப்பு. சிவில் பதிவு அமைப்பு (CRS) ஒரு குறிகாட்டியாக எடுத்துக் கொள்ளப்பட்டால் மட்டுமே உண்மையான பாலின விகிதம் வெளிவரும்,” என்று அவர் கூறுகிறார்.

**நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி மாணவ, மாணவியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது, மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம் என மகளிர் சமுதாயத்துக்கு பல திட்டங்களை செயல்படுத்தியது, விவசாயிகள், தொழில்துறையினர், இளைஞர்கள் என அனைத்து தரப்புக்கும் பார்த்து, பார்த்து திட்டங்களை செயல்படுத்தி, அனைவரது வாழ்விலும் ஒளி விளக்கேற்றியது என திராவிட மாடல் அரசு நாட்டுக்கே வழிகாட்டியாக இருக்கிறது.**

**அனைவரது வாழ்விலும் ஒளி விளக்கேற்றியது! ‘திராவிட மாடல் அரசு!’**

கொரோனா காலத்தில் சிறப்பாக செயல்பட்டு, தமிழ்நாட்டை மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டு வந்தது, நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி மாணவ, மாணவியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது, மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம் என மகளிர் சமுதாயத்துக்கு பல திட்டங்களை செயல்படுத்தியது, விவசாயிகள், தொழில்துறையினர், இளைஞர்கள் என அனைத்து தரப்புக்கும் பார்த்து, பார்த்து திட்டங்களை செயல்படுத்தி, அனைவரது வாழ்விலும் ஒளி விளக்கேற்றியது என திராவிட மாடல் அரசு நாட்டுக்கே வழிகாட்டியாக இருப்பதாக ‘தி இந்து’ ஆங்கில நாளேடு புகழ்ந்துரைத்துள்ளது.